# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 35வது கூட்டறிக்கை 2021.01.13

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 35வது அமர்வு 2021.01.13 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம். நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. திரு.வீ.ஜெயச்சந்திரன் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 04. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 06. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 08. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 02. ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. செல்வி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 35வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இன்று சபைக் கூட்டத்திற்கு கௌரவ உறுப்பினர் மாஹிர், கௌரவ உறுப்பினர் முஸம்மில் அவர்கள் சமூகமளிக்க முடியாது என்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார்கள். அதை சபைக்கு சமர்ப்பித்தவனாக, இவ் அமர்வின் முதல் அம்சமாக சென்ற மாத கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் ஆமோதிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, தங்களால் முன்மொழியப்பட்ட வாகன டயர்கள் சம்மந்தமாக, வாகன டயர் விலைகளில் சில கருத்துக்கள் கூறப்படுகின்றது. அதனால் Technical Committee Evaluation இற்கு பின் அல்லது விலை கோரப்பட்ட பின் கௌரவ உறுப்பினர் முஸம்மில்,

கௌரவ உறுப்பினர் நளீம், கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்கள் இணைந்து மூவர் கொண்ட குழு அதனைப் பார்த்து அதற்குரிய அறிவுரைகளை கொடுக்குமாறு கூறினீர்கள். என் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கைக்கு முதற்கண் உங்களுக்கு நன்றி கூறியவனாகவும், அதை சபையால் ஏகமனதாக தீர்மானம் எடுக்கப்பட்டதற்காக சபை கௌரவ உறுப்பினர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்தவனாகவும், கௌரவ தவிசாளர் அவர்களே நான் இல்லாத சந்தர்ப்பத்தில் எனது பெயர் முன்மொழியப்பட்டிருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் அதில் பங்குபற்ற விரும்பவில்லையா?

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
அதில் பங்குபற்ற விரும்பவில்லை. அத்துடன் சென்ற கூட்டத்திற்கு முன்னர் நடைபெற்ற கூட்டத்தில் டயர்கள் சம்மந்தமாக என்னால் கேட்கப்பட்ட கேள்வி நேரத்தில் அக் கேள்விகள் நான் கேட்டது இந்த சபையின் தெளிவுக்காகவும், எனது தெளிவுக்காகவும். அவ்வாறு கேட்கப்பட்ட கேள்விகள் அந்த டயர் உரிய கடை நிறுவனத்திற்கும், சேவிஸ் செய்யப்பட்ட அந்த நிறுவனத்திற்கும் இந்த சபையின் ஊடாக தொலைபேசி அழைப்பின் மூலம் உறுப்பினர் றியாஸ் அவர்கள்தான் டயரின் விலைகளை மிகவும் காரசமாக கேட்டிருக்கிறார் என்று சொல்லப்பட்டு அவர்கள் என்னைக் கண்டு நீங்கள் தான் இந்த டயரின் விலைகளில் ஆர்க்கோசமாக இருக்கின்றீர்களாம். நாங்கள் இந்த ஊரில் பிறக்கவில்லையா? நாங்கள் தொழில் செய்வதில்லையா என்று கேட்கின்றார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது வழமையாக நடப்பது. யார் இவைகளை சொல்கின்றார்கள் என்று தெரியாது. இவை எல்லாம் கூட்டறிக்கையில் வருகின்ற விடயங்கள். கூட்டறிக்கையை ஒருவர் வாசித்தால் அதை சொல்லவும் தேவை இல்லை.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, உண்மையாக நான் வீடு செல்வதற்கு முன்னரே எனக்கு தொலைபேசியின் ஊடாக இவ்வாறு நடக்கின்றது என்று சொல்வது என்னைப் பொருத்தவரைக்கும் இந்த சபையை பொருத்தவரைக்கும் மன வேதனையாக இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சபையில் கதைப்பது ஒன்றும் இரகசியம் இல்லையே. கதைப்பது எல்லாம் கூட்டறிக்கையில் வருகின்றது. உங்கள் கருத்தை உள்வாங்கியவனாக, நீங்கள் அக் குழுவில் இருந்து தவிர்ந்து கொள்கின்றீர்களா?

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் அக் குழுவில் இருந்து தவிர்ந்து கொள்கின்றேன் என்பதை பணிவாய் வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வேறு ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் அதை ஆமோதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.நஜீம் |

கூட்டறிக்கை சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உங்கள் எல்லோருக்கும் தெரியும் இன்று பாராளுமன்றத்தில் கூட கொவிட் பரவியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. அப்படியான ஒரு சூழலில் சில வேளைகளில் இது தொடருமானால் அடுத்த அமர்வு சில நேரம் Zoom வழியாக நடாத்த வேண்டியதாக இருக்கும். அதனால் நீங்கள்

ஒவ்வொருவரும் உங்களை பாதுகாப்பதோடு, மக்களை சந்திக்கும் போது மக்களுக்கும் அந்த விழிப்புணர்வை ஏற்படுத்தி சபைக்கும் அத்தியவசிய தேவைகளை தவிர வேறு எதற்காகவும் இங்கு வரக்கூடாது என்ற ஒரு எச்சரிக்கையை நீங்கள் கொடுப்பது நல்லது. இன்று நாட்டின் நிலமை அவ்வாறுதான் சென்றிருக்கின்றது. நேற்று நடைபெற இருந்த சபை அமர்வை இன்றைக்கு நடாத்துவதற்கு காரணம் நேற்று அம்பாரையில் ஒரு முக்கியமான கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அம்பாரைக்கு சென்றதும் அதில் பங்குபற்ற இருந்த அமைச்சர் விமல வீர திஸாநாயக்க அவர்களுக்கு கொவிட் தொற்று ஏற்பட்டதனால் கொழும்பில் இருந்து எல்லா உத்தியோகத்தர்கள் வந்தும் அக் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டது. அப்படியான ஒரு தெளிவில்லாத காலத்தில் நாம் மிகவும் கவனமாக இவ் விடயங்களில் இருக்க வேண்டும் என்று கூறியவனாக,

சபை அமர்வுகளையும் சுகாதார திணைக்களத்தின் அறிவுறுத்தலின் படி மிகவும் சுருக்கமாக நடாத்த வேண்டும் என்று மீண்டும் மீண்டும் அவர்கள் திணிக்கின்றார்கள். சென்ற வருடம் ஏறத்தாள 09 மாதங்கள் வருமானம் ஒரு மந்த நிலையில் இருக்கும் வகையில் நாம் செயற்பட்டும் நமது சொந்த வருமானமாக நமது இலக்கில் 53% அடைந்திருந்தோம். இருந்தும் நமது சேவைகளில் எந்த குறையும் இல்லாமல் நடாத்தி வந்து அதற்கு உதவியதற்கு உங்கள் எல்லோருக்கும் நன்றி கூறி, இந்த வருடத்தில் முதல் 03 மாதங்களுக்கும் நாம் நிதியை பொருத்தமட்டில் மிகவும் கவனமாக செயற்பட வேண்டியதாக இருக்கின்றது. இந்த அரசு எந்த நிலைப்பாட்டை எடுக்கும், எப்படி நமக்கு உதவிகள் தரும் என்று ஒரு தெளிவில்லாமல் இருக்கின்றது. அபிவிருத்தி வேலைகள் வரலாம். நமது கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்களும் மிகவும் ஈடுபாடோடு முந்தநாள் ஒரு கடிதம் தந்திருந்தார் 03 பாலங்கள் அவர் சிபார்சு செய்திருக்கின்றார். அவ் விடயங்களில் மத்திய அரசில் இருந்து உதவிகள் வந்தாலும் நமது சபையின் அபிவிருத்தி வேலைகளில் நாம் மிகவும் கட்டுப்பாட்டோடு நாளாந்த சேவைகளை செய்து முடிப்பதற்கு நீங்கள் எல்லோரும் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டு,

எமது சபையில் 06 வருடங்களாக பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றிய அல் ஹாஜ் M.I.இஸ்ஸதீன் அவர்கள் ஓய்வு பெற்று சென்றுவிட்டார். அவருக்கு உங்கள் சார்பிலும் இந்த சபை சார்பிலும் 06 வருடங்களும் இங்கு சேவை செய்ததற்கு பாராட்டியவனாக, அவரின் இடத்திற்கு தற்போது ஜனாப் U.L.A. மஜீட் அவர்கள் இயங்குகின்றார். அவருக்கும் வாழ்த்தியவனாக, அடுத்ததாக சென்ற மாதத்தின் செலவீனங்களை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன். அதில் ஏதாவது கேள்விகள் இருப்பின் அதனை கேட்கலாம். இல்லாவிடில் அதனை ஆமோதிக்கலாம்.

### தீர்மானம் - 04/35/01

சென்ற மாதம் 2020.12.01 தொடக்கம் 2020.12.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/35/02

சபையில் கடமையாற்றும் நிரந்தர மற்றும் தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் அலுவலகர் / ஊழியர்களுக்கான 2021 ஆம் ஆண்டிற்கான மாதாந்த சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இன்று சகல நடவடிக்கைகளும் இலத்திரனியல் மூலமாக நடப்பதனால் நூலகங்களுக்கு நாம் கணனி வசதிகள் ஏற்டுத்த வேண்டும். அது மட்டுமல்லாமல் Zoom Meeting நடாத்த வேண்டுமானால் பெரிய Screen உடன் Computer தேவைப்படும். அதற்குரிய உபகரணங்களை தேவைக்கேற்ப அந்த அந்த நூலகங்களுக்கு எடுத்துக் கொடுக்க வேண்டும். முக்கியமாக வறிய குடும்பம் வாழுகின்ற பகுதிகளுக்கு ஏற்படுத்த வேண்டும்.

**தீர்மானம் - 04/35/03**

புதிதாக இடமாற்றம் பெற்று கடமையேற்றுள்ள ICT உத்தியோகத்தர், பொது நூலகங்கள்/வாசிப்பு நிலையம் என்பவற்றுக்கு தேவையான கணனி மற்றும் தேவையான தளபாடம் கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.எஸ்.சரீபா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சம்மாந்துறையில் இயங்கிவரும் நில அளவைத் திணைக்களம் அரச கட்டடங்களில் இடம் தேடச்சொல்லி ஜனாதிபதியின் வேண்டுகோள். பல மாதங்களாக நம்மோடு பேசி வருகின்றார்கள். அதனால் எமது பழைய கட்டிடத்தில் நிர்வாகப் பக்கத்தை தவிர மற்ற இடத்தை அரசாங்க விதிமுறைகளுக்கு அடிபணிந்து சில நேரம் அமைச்சரின் அனுமதி எடுக்கவேண்டுமோ தெரியாது. இருந்தாலும் அதை நில அளவைத் திணைக்களத்திற்கு வாடகைக்கு கொடுப்பதற்கு சபையின் அனுமதியை கேட்கின்றேன்.

**தீர்மானம் - 04/35/04**

நில அளவைத் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கமைய பழைய பிரதேச சபையின் கட்டிடத்தின் ஒரு பகுதியை நடைமுறையில் உள்ள சட்டவிதிகளுக்கு ஏற்ப வாடகைக்கு வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம்.இன்பவதி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
2021 ஆம் ஆண்டுக்கு தேவையான நுகர்வுப் பொருட்கள், காகிதாதிகள், அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்தல். இக் கொள்வனவு செய்வதில் கௌரவ உறுப்பினர்களும் அக் குழுவில் இருப்பதை நான் விரும்புகின்றேன். ஏனென்றால் உங்களுக்கு இங்கு என்ன நடைபெறுகின்றது என்று தெரிய வரும். நிர்வாகத்தில் ஈடுபட விரும்பிய உறுப்பினர்கள் இக் குழுவில் இருக்கலாம். நாளாந்த தொழில் செய்பவர்களுக்கு கஸ்டமாக இருக்கும். கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் அக் குழுவுடன் கலந்தாலோசித்து எப்படி செய்யலாம் என்ற ரீதியில் பங்களித்தால் உதவியாக இருக்கும்.

**தீர்மானம் - 04/35/05**

2021 ஆம் ஆண்டிற்கு தேவையான நுகர்வுப் பொருட்கள், காகிதாதிகள், அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/35/06**

JX – 7618 இலக்கமுடைய உழவு இயந்திரத்திற்கு பின் டயர் மாற்றுவதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எம்.ரீ.பௌசுள்ளாஹ்

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/35/07**

LI 3269 (கொம்பெக்டர்) வாகனத்தின் Spring Blades திருத்துவதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/35/08**

சென்னல் கிராம ஆரம்ப வைத்தியசாலைக்கும் மாத்திரை பொதிகள் பெற்றுக் கொடுப்பதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம்

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

புதிதாக செய்யப்பட்ட நம் மூலமாகவோ அல்லது வேறு திட்டங்கள் ஊடாக செய்யப்படும் பாதைகளுக்கு நிதி நிலவரத்தை கருத்திற் கொண்டு ஒரு குறுகிய காலத்திற்குள் தார் இட வேண்டும்.

**தீர்மானம் - 04/35/09**

கிராம சக்தி வேலைத்திட்டத்தின் கீழ் மல் - 16ம் வீதியில் கொங்கிறீட் இடப்பட்ட 25 மீற்றர் வீதிக்கு மற்றும் சிறிய அளவிலான தார் இடப்படாத கொங்கிறீட் பாதைகளுக்கும் தார் ஊற்றுவதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர்

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு மோட்டர் சைக்கிள் பெற்றோல் வழங்கல். இவர்கள் எமக்கு கீழ் வருபவர்கள் இல்லை. இவர்கள் எம்முடன் செய்யும் சேவை மடுவத்தில் சென்று

பார்வையிடுகின்றார்கள். அதற்கு நாம் Over Time கொடுப்பனவு வழங்குகின்றோம். இப்படியான ஒரு நிலையில் அவர்களுக்கு மேலதிகமாக கொவிட் வேலைகளுக்காக நாம் ஒரு Allowance வழங்கலாமா என்ற ஒரு கேள்வி. அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்கள். இதில் உங்களது கருத்துக்கள் இருக்குமானால் தெரிவிக்கலாம். அவர்களின் திணைக்களத்தினாலும் ரூபா 5000.00 Motor Bike Allowance கொடுக்கப்படுகின்றது. அதற்கு மேலாக அதை எவ்வாறு நியாயப்படுத்தலாம் என்பதுதான் கேள்வி.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, சுகாதாரப் பரிசோதகர்கள் என்பவர்கள் PD, RDHS, MOH இற்கு உட்பட்டவர்கள். இவர்களுக்கு விசேட சலுகையாக ரூபா 5000.00 RDHS இனால் ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கின்றது. இவர்களுக்கு இதை விட Claim உம் வழங்கப்படுகின்றது. தற்போதய கொவிட் 19 காரணமாக விசேட சலுகைகளாக பெற்றோலுக்கும், இவர்களுக்குரிய ஏனைய வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றது. ஆகவே இதை நாங்கள் தவிர்த்துக் கொள்வது நல்லது என்பது எனது கருத்து. ஏனென்றால் சபையில் எத்தனையோ வேலைகள் செய்து கொண்டிருப்பதால் இது அத்தியவசியம் இல்லை என்பது எனது கருத்து ஆகும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நான் உங்கள் சார்பில் MOH உடன் கதைத்து இதில் தெளிவு காணலாம். நமது நிதி நிலவரமும் உறுதிப்படுத்தக் கூடிய நிலையில் இல்லை. அவர்களின் திணைக்களத்தில் வழங்கப்படுமானால் இவ்வாறு விசேடமாக வழங்குவது என்றால் சில வேளைகளில் அமைச்சரின் அல்லது செயலாளரின் அனுமதி சில வேளைகளில் எடுக்க வேண்டிய தேவைப்பாடுகள் இருக்கலாம்.

இம்முறை PSDG மாகாண சபையினால் மொத்தமாக 25 இலட்சத்திற்கு அவர்கள் பரிந்துரைகள் கேட்டிருக்கின்றார்கள். பாதைகளுக்கு 07 இலட்சமும், Water Supply இற்காக 05 இலட்சமும், Solid Waste Management இற்கு 05 இலட்சமும், Local Government Services இற்கு 08 இலட்சமும் ஆகும். இதில் எமது சபையில் இருந்து மல்வத்தை APC 2ம் குறுக்குத்தெரு மீதி வேலைக்கு 7 இலட்சமும், நீர் வழங்கலுக்காக மல்லிகை தீவு மக்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு Water Tank எடுத்துக் கொடுத்தால் அப் பிரச்சினை தீரும். Solid Waste Management இற்கு Tractors ஆளங்குளத்திற்கு சென்று வருவதை குறைப்பதற்காக நீல Tipper இற்கு மேலதிக Capacity இனை செய்வதற்கு 1 ½ இலட்சமும் அடுத்தது உக்கும் குப்பைகளை ஒழுங்காக பிரித்து தரும் 700 வீடுகளுக்கு சிறிய Bucket எடுத்து கொடுப்பதற்கும், வளத்தாப்பிட்டி, மல்வத்தையில் 03 பஸ் தரிப்பு நிலையமும், கல்லரிச்சல் சிறுவர் பூங்காவிற்கு Watcher Hut அமைத்தல் போன்றவற்றிற்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கின்றது.

சென்ற வருடமும் 25 மில்லியன் என்று பேசினார்கள். ஆனால் இதுதான் நாட்டின் நிலமை. PSDG நேரடியாக வருவது ஆளுநர் கையில். நமது உறுப்பினர்கள் ஆளுநருடன் செல்வாக்கு செலுத்த முடியுமானால் பிரத்தியேக வேலைகளை நமது PSDG மூலம் ஒரு Tractor ஆவது எடுக்க முயற்சிக்க வேண்டும். ஏனென்றால் எம்மிடம் இருக்கும் Tractors எல்லாம் 10 வருடத்திற்கு மேற்பட்டது. 20 வருடம் உடைய Tractors உம் இன்றைக்கு வீதியில் ஓடுகின்றது. அதை பாரமரிக்கின்ற செலவு கூடுகின்றது. தயவு செய்து ஆளுநரோடு தொடர்பு கொண்டு இந்த 02 மாதங்களுக்குள் மீதிகள் இருந்தால் எடுக்கலாம். அவைகளை எடுத்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

## தீர்மானம் - 04/35/10

2021 இற்கான PSDG நிதி ஒதுக்கீட்டில் பின்வரும் வேலைகளை செய்வதற்கான பிரேரணை.

1. **Local Authority Roads**
   I. Construction of Concrete surface road (Balance Work) at APC Road 02$^{nd}$ cross Malwathai – Rs.700,000.00

2. **Community Water Supply**
    I. Purchasing 500 Lt (100) Water Tanks for Issuing Malligaitivu Village People. – Rs.500,000.00

3. **Waste Management**
    I. Extension of Tipper for Solid Waste Management System – Rs.150,000.00
    II. Purchasing Segregation bins (700) for issuing at Sammanthurai Pradeshiya Sabha Limit. – Rs.350,000.00

4. **Other Local Government Services**
    I. Construction of Bus Halt at walathapity Sammanthurai Pradeshiya Sabha – Rs.167,000.83
    II. Construction of Bus Halt at Malwathai Near Post Office Building – Rs.167,000.83
    III. Construction of Bus Halt at Malwathai School Front (Kalmunai – Amparai Road Left Side) – Rs.167,000.38
    IV. Construction of Kallaraichal Children Park Watcher Hut – Rs.298,997.96

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கைகாட்டி சந்தியில் புது பாலம் ஒன்று போடப்பட்டுள்ளது. அப் பாலத்தின் அருகில் மர ஆலை ஒன்று இருக்கின்றது. அங்கு வாகனங்கள் வந்து திரும்புவதற்கு ஒரு பிரச்சினையாக இருக்கின்றது. அதனால் நீர்ப்பாசன திணைக்களத்துடன் சேர்ந்து Abutment Wall அமைக்க வேண்டியதாக இருக்கின்றது. அதற்குரிய பணத்தை பங்களிப்பு செய்யலாமா என்று தெரியாது. செய்யக்கூடிய வசதிகள் இல்லை. நீர்ப்பாசன திணைக்களத்துடன் சேர்ந்து அவ் வேலைத்திட்டத்தினை செய்ய ஒரு முயற்சி ஒன்று எடுக்க வேண்டும்.

**தீர்மானம் - 04/35/11**

கைகாட்டி S வாய்க்காலில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாலத்தின் அருகில் வாகனங்கள் திரும்புவதற்காக Abutment Wall (Retaining Wall) அமைப்பதற்காக நீர்ப் பாசன திணைக்களத்துடன் கலந்துரையாடி அவ் வேலையினை செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஆளுநர் அவர்கள் மாற்றுத்திறனுள்ள 02 பேருக்கு அதில் ஆதம்பாவா அதீப் அஹமட் அவர் வாய் பேச முடியாதவர். அவருக்கு விசேட கோட்டாவின் கீழ் தற்காலிக நியமனத்திற்கு கடிதம் அனுப்பி இருக்கின்றார். அத்தோடு ஆணையாளர் அவர்கள் 311 மலை வீதி, மலையடிக் கிராமத்தை சேர்ந்த செல்வி எம்.ஏ. மௌபியா இவர் முதலை கடித்து கால் இழந்த பிள்ளை. இவருக்கும்

விசேட கோட்டாவின் கீழ் நியமனம் வழங்குவதற்கு சபையின் அங்கீகாரத்தை கேட்டிருக்கின்றார்கள். அதற்கான முன்மொழிவுகள் மிகவும் தீவிரமாக கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்களினால் செய்யப்பட்டது. ஆனால் இதற்கு நாமும் நியமனங்கள் கேட்டு 11ம் மாதம் கடிதம் அனுப்பி இருந்தோம். பொதுவாக எஞ்சியவர்களை எடுப்பதற்கு அந்த கடிதத்தை சுட்டிக்காட்டி இந்த நியமனத்திற்கு கேட்டிருக்கின்றார்கள். ஆட்சேபணை இல்லாவிட்டால் அங்கீகரிக்கலாம்.

### தீர்மானம் - 04/35/12

உள்ளூராட்சி ஆணையாளரின் வேண்டுகோளிற்கமைய பொது நிருவாகச் சுற்றுநிரூபம் 01/99 இற்கமையவும், மனிதாபிமான அடிப்படையிலும் செல்வி எம்.ஏ.மௌபியா என்பவருக்கு 06 மாத தற்காலிக அடிப்படையில் நூலக உதவியாளர் மற்றும் கௌரவ ஆளுநரின் கட்டளைக்கமைய ஜனாப் ஏ.பீ.அதீப் அகமட் என்பவருக்கு தற்காலிக வேலைத் தொழிலாளி நியமனம் வழங்குவதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் வீரமுனை கோயிலுக்கு பின்னால் அவர்கள் மின் இணைப்பிற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அதே நேரம் அவ்விடத்தை சபையின் நிதி நிலவரத்தை பார்த்து அழகுபடுத்துவதற்காக சில இருப்பிடங்களை உருவாக்கி அவ்விடத்தை ஒரு பொழுதுபோக்கு இடமாக மாற்ற வேண்டும்.

### தீர்மானம் - 04/35/13

சபையின் நிதி நிலமையினை பொறுத்து வீரமுனை கோயிலுக்கு பின்னால் தேவையான இருப்பிடங்களை அமைத்து அவ்விடத்தை ஒரு பொழுதுபோக்குத் தளமாக மாற்றுவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் குடியிருப்பு நிலத்தை அதிகரித்தல் தொடர்பான பிரேரணை. கௌரவ உறுப்பினர் அவர்கள் அதனை முன்மொழியலாம்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, விவசாய நிலத்தை குடியிருப்பு நிலமாக மாற்றுவது தொடர்பாக, 1971 ஆம் ஆண்டு எங்களுடைய சனத்தொகை 51510 ஆகும். ஆனால் சுனாமி காரணமாக 2007 இல் 61134 ஆக சனத்தொகை அதிகரித்திருக்கின்றது. 2019 இல் 74796 ஆக சனத்தொகை சம்மாந்துறையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் குடியிருப்புக் காணிகள் எந்தளவும் அதிகரிக்கவில்லை. அவர்கள் பரம்பரையாக வளவுகளை பிள்ளைகளுக்கு பிரித்துக் கொண்டு வருகின்றார்களே தவிர அவர்களுக்கு வேறு நிலங்களை எடுத்து பிள்ளைகளுக்கு வீடு கட்டிக் கொடுக்க முடியாத நிலையில் உள்ளது. சிலர் தன்னை மீறி அவர்களுடைய விவசாய காணிகளை மண் போட்டு மூடி பிள்ளைகளுக்கு வீடு கட்டி திருமணம் செய்திருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் சுயமாகவே அந்த காணியை மண் போட்டு மூடியிருப்பதால் கிராம அல்லது நகர அபிவிருத்தி செய்வது மிகவும் கடினமாக இருக்கும்.

ஏனென்றால் அவர்கள் ஒரு அளவை செய்யாமல் கண் அளவில் அளந்து ஒவ்வொரு துண்டு துண்டாக பிள்ளைகளுக்கு பங்கிட்டு விற்று இருப்பதன் காரணமாக எங்களுக்கு நீர் இணைப்பு எடுப்பதற்கு அல்லது தெரு விளக்குகள் எடுப்பதற்கு, பாதைகள் அமைப்பதற்கு கூட பிற்காலத்தில் பாரிய பிரச்சினைகள் ஏற்படும். இதை நாங்கள் கருத்திற் கொண்டு ஏனென்றால் 08 அடி, 10 அடி, 14 அடி என்று அவர்களே வீதியை அளந்து போட்டிருக்கின்றார்கள். இவ்வாறான பிரச்சினைகள் தற்போதே அதிகமாக காணப்படுகின்றது. ஒரு தனி நபர் பிரித்து அதை விற்பதன் மூலமாக பிற்காலத்தில் பாரிய பிரச்சினைகள் கட்டாயமாக ஏற்படும். ஆகவே இந்த சபையில் இருக்கின்ற கௌரவ தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் இதை கருத்திற் கொண்டு இதற்கு சரியான ஒரு தீர்வை எடுத்து எங்களுடைய சம்மாந்துறையில் காணப்படுகின்ற பிரதான பாதையில் இருந்து 200 மீற்றர் வரை விவசாய காணிகளை குடியிருப்பு காணியாக மாற்றுவதற்கு நாங்கள் ஒரு குழுவை அமைத்து முயற்சி செய்வோமானால் இதற்கு வெற்றி கிடைக்கும் என நம்பி எனது உரையை முடிக்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, மேற்படி விடயம் எமது ஊருக்கு மிகவும் தேவையானது. இலங்கை போல் எமது ஊரும் பெருகுவதற்கு இடம் இல்லை. சுற்றி வட்டைகள் இருப்பதால் இது நல்ல ஏற்பாடு. ஆனால் இதற்கு சட்டத்தில் பெரிய ஒரு பிரச்சினை இங்கு மட்டுமல்ல இலங்கை பூராகவும் இப் பிரச்சினை இருக்கின்றது. நான் நினைக்கின்றேன் இதை எமது சபையால் தீர்வு வழங்க இயலாது. கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி அவர்களுக்கு தெரியும் தற்போது அதிகமானவைகள் சட்டவிரோதமாக இருக்கின்றது. ஒன்றுமே உண்மையான அனுமதி எடுத்து வரவில்லை. இதே நிலமை தான் சாய்ந்தமருது, கல்முனை எந்தவொரு நிலத்தையும் மீண்டும் நிரப்ப முடியாது என்று வர்த்தமானி மூலம் அறிவித்திருக்கின்றார்கள். ஆனால் இச் சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்தி ஏகமனதாக ஒரு தீர்மானத்தை எடுத்து உரிய அமைச்சுகளுக்கு அனுப்பி வைப்பது சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்களால் முன்வைக்கப்பட்ட பிரேரணை காலத்தின் தேவை. தற்போது எமது ஊரின் நிலமையை எதிர்நோக்குகின்ற போது இவ்வாறான ஒரு பிரேரணை என்பது மிகவும் சாலச் சிறந்தது. அந்த வகையிலே அவர் குறிப்பிட்டவாறு பிரதான பாதைகள் என்பதற்கு மாற்றாக எமது ஊரின் எல்லைக் கிராமங்களான குறிப்பாக புளக் ஜே மேற்கு – 02, சென்னல் கிராமம் 2ம் பிரிவு, வீரமுனை – 04, செட்டியார் வட்டை போன்ற பிரதேசங்கள் எமது கிராமத்தை அண்டிய எல்லையில் இருந்து 200 அல்லது 300 மீற்றர் தூரத்தை குடியிருப்பு காணிகளாக மாற்றுவதற்கு இந்த முயற்சியை எடுப்போமானால் இன்னும் மக்களுக்கு இலகுவானதாக இருக்கும். ஏனென்றால் தற்போது ஊர் பூமரத்து சந்தியில் இருந்து தியேட்டர் சந்தியில் இருந்து, ஹிஜ்ரா சந்தியில் இருந்து, கைகாட்டி சந்தியில் இருந்து தற்போது பள்ளாத்து சந்தி வரைக்கும் பெருகிவிட்டது.

மக்களின் குடியிருப்பு கைகாட்டி சந்தியில் இருந்து சென்று கொண்டிருக்கின்றது. அதே போல் தென்னம்பிள்ளை கிராமம் இருக்கின்ற அண்டிய பிரதேசத்தில் ஊரோடு அண்டிய காணிகள் சட்ட விரோதமான முறையிலே நிரப்பப்பட்டுள்ளது. ஆனால் நிரப்பப்பட்ட விதம் சட்டவிரோதமாக இருந்தாலும் அது மக்களுடைய தேவை. குறிப்பாக மக்களுடைய வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்ற மக்கள் பிள்ளைகளுக்கு ஒரு இருப்பிடத்தை அமைப்பதற்கு மிகவும் சிரமமான ஒரு காலகட்டத்திலே இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். நிலத்தின் பெறுமதி அந்தளவு மாறிவிட்டது. ஆகவே இப் பிரேரணையை இன்று இல்லாவிட்டாலும் இதற்காக எமது சபையிலே இருக்கின்ற அனுபவம் வாய்ந்த உறுப்பினர்கள் கௌரவ உறுப்பினர் சட்டத்தரணி முஸ்தபா அவர்களையும் உள்வாங்கி இன்று அல்லது இதற்கு பின்னர் இது சம்மந்தமான உறுப்பினர்களையும் அதே போன்று துறை சார்ந்த நிபுணர்களையும் சேர்த்து இப் பிரேரணையை வெற்றிகரமாக செய்து முடிக்க வேண்டும் என்பதை கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

எமது பிரதித் தவிசாளர் அச்சி முஹம்மட் அவர்களுக்கு தெரியும் நான் முன்பு ஒரு தரமும் இவ்விடயத்தைப் பற்றி பேசி இருக்கின்றோம். இதில் 02 பிரச்சினைகள் இருக்கின்றது. ஒன்று சட்ட விரோதமாக இந்தக் காணிகள் நிரப்பப்படுவதும், மற்றயது பிரித்து விற்கப்படுவதும். இதற்கு எந்த சட்டத்தையும் மதிக்காமல் நமது ஊர் நொத்தாரிசுகள் உறுதி எழுதுகின்றார்கள். நீதி மன்றத்தில் ஆட்சி உறுதிக்கு இடம் இல்லை. இந்த சபையும் பாரம் எடுப்பதில்லை. குடியிருப்புக் காணிகள் இந்த ஊரில் மட்டுமல்ல எல்லா ஊரிலும் ஆகப் பெறுமதியான சொத்து. நாம் நமது எல்லையை தாண்டி செல்பவர்கள் இல்லை. இன்று எமது எல்லையை தாண்டி நமது நிர்வாக எல்லையில் எடுப்பதற்கு கூட ஒரு துண்டு காணி இல்லை.

அரச காணி என்று இனங்காணுவதற்கு ஆலையடி வட்டையை தவிர வேறு ஒரு இடமும் இல்லை. அப்படியான ஒரு சூழலில் இந்த தீர்மானத்தை ஆக்கபூர்வமாக சட்டரீதியாக, நான் நன்றி கூற வேண்டும் நமது செயலாளருக்கு அவர் அதற்குரிய ஆவணங்கள் எல்லாவற்றையும் தேடி ஒரு File உருவாக்கி இருக்கின்றார். அதை வைத்து நமது கௌரவ உறுப்பினர் சட்டத்தரணி முஸ்தபா அவர்களின் தலமையில் இந்த நிறுவனங்களோடு பேசி அதன் சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து ஒரு தீர்மானத்தை எடுக்கலாம். நமது தீர்மானம் ஒரு சிபார்சே தவிர சட்டரீதியாக எந்த வலுவும் இல்லை. நாம் நமது தேவையை எடுத்துக் காட்டி ஆக்கபூர்வமான ஒரு ஆவணத்தை ஏற்படுத்தி இந்த சபையில் மீண்டும் அதை உத்தியோகபூர்வ தீர்மானமாக எடுத்து செயற்பட வேண்டும்.

## தீர்மானம் - 04/35/14

சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட நிலப்பரப்பில் சம்மாந்துறையின் நான்கு பக்க பிரதான வீதியிலிருந்து 200 மீற்றர் அளவில் காணப்படுகின்ற விவசாய நிலம் அல்லது வேறு நிலங்களையும் குடியிருப்பு நிலமாக மாற்றுவதற்காக கௌரவ உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்களின் தலமையில் ஒரு குழுவை அமைப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இன்று ஒரு வளவை பிரித்து எழுதுவது என்றால் சட்டரீதியாக ஒரு Partition Plan செய்யப்பட்டு சபையில் சமர்ப்பிக்கப்பட்டு UDA சட்டத்தின் கீழ் அந்த விதிமுறைகளுக்கு ஏற்ப அனுமதிக்கப்பட்ட பின்னர்தான் அதற்கு உறுதி எழுதலாம். ஆனால் தற்போது அப்படி எழுதுவதில்லை. இப் பிரச்சினைகள் எல்லாம் நம்மிடம் வருகின்றது. அதாவது 08 அடி வீதிதான் இருக்கின்றது அதில் போய் திரும்ப இயலாது என்று ஒரு முறைப்பாடு வந்தால் அது ஒரு சட்டவிரோதமான பிரிவினை பெரிய ஒரு வளவு எடுத்து பிரித்து 08 அடி பாதை அமைத்து 04 பேருக்கு விற்றுவிட்டார். இறுதியில் இருப்பவருக்கு போக இயலாது. அவ்விடத்தில் ஆகக் குறைந்தது 12 அடியாவது வேண்டும். இந்த விதிமுறைகளுக்கு ஏற்ப இப்பிரிவினைகளை அடக்காவிட்டால் நமக்கு நிர்வாக ரீதியில் தீர்வு காண இயலாது.

கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்களுடன் சென்னல் கிராமம் - 02 இல் ஒரு பிரச்சினைக்கு சென்றோம். சட்டரீதியாக இந்த சபைக்கு விண்ணப்பம் வந்து நாம் அனுமதி கொடுத்தோம். ஆனால் நடைமுறையில் அதில் ஒரு நடைபாதை இருந்து அதனால் நீர் இணைப்பும் சென்றிருக்கின்றது. சரியான முறையில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அப் பாதையில் பைப் இணை போடுவதற்கு முதல் எம்மிடமோ அல்லது DS இடமோ இது பொதுப்பாதையா என்று பார்த்திருக்க வேண்டும். தற்போது சென்று பார்த்தால் அநியாயம் போல் விளங்குகின்றது. இவைகளை தவிர்ப்பது என்றால் Partition Plan இல்லாமல் எழுதப்படும் உறுதிகளை நாம் பாரம் எடுக்கக் கூடாது. பாரம் எடுத்தால் அந்த சிக்கல் வரும். அது உண்மையாக சட்டரீதியான ஒரு வலுவான ஒரு ஆவணம் இல்லை.

கிராம Courts அருகில் எனது மனைவிக்கு சொந்தமான ஒரு துண்டு காணி இருக்கின்றது. அதை நான் மொத்தமாக விற்பது என்றால் ஒரு பிரச்சினையும் இல்லை. ஆனால் அதை துண்டு துண்டாக விற்பது என்றால் சரியான முறையில் Partition Plan செய்து எடுத்தால் 72 பேர்ச்சில் 54 பேர்ச் தான் மிஞ்சும். மற்றயவைகள் பாதைக்கு சென்றுவிடும். ஆனால் அதை Partition Plan இல்லாமல் செய்ய இயலாது. கௌரவ உறுப்பினர்களும் உங்களது பகுதிகளில் இப்படியான வேலைகள் நடக்கின்ற போது நாம் ஆரம்பத்தில் நிறுத்தாவிட்டால் பெரிய பிரச்சினை. எல்லா பிழைகளையும் செய்துவிட்டு சபைக்கு வந்தவுடன் சபையால் தீர்ப்பு கொடுக்க முடியாது. சட்ட ரீதியாக பிரிவினைகள் செய்து வளவுகள் பிரிக்கப்பட்டு சட்டரீதியாக Partition Plan இல்லாமல் எழுதப்படும் உறுதிகளை நாம் ஏற்கக்கூடாது.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சட்டரீதியாக சென்றவுடன் பிரதேச செயலகத்தில் அவ்வேலையை துரிதமாக மக்களின் நிலமைக்கேற்ப செய்வதில்லை. அது வருடக்கணக்கில் போவதை நாடி மக்களின் தற்போதய வேகமான வாழ்க்கையில் அவர்கள் சட்டத்தரணியை அழைத்து அவசராமக அப்பிரச்சினையை தீர்த்து முடித்த மாதிரி நினைக்கின்றார்கள். தற்போது பிலாவடி லேனில் எத்தனை விபத்துக்கள் நடக்கின்றது என்று தெரியாது. மனார்ப்பள்ளி மூலையில் ஒரு கட்டடம் கட்டப்படுகின்றது. அதற்கு எந்தவொரு சட்டரீதியான அனுமதியும் இருக்கின்றதா என்பது ஒரு கேள்விக்குரியாக இருக்கின்றது. அதே போன்று Market வீதியில் நாம் செய்ய வேண்டிய வீதியில் மிக முக்கியமாக இருக்கின்ற ஒருவரே சட்டவிரோதமாக கட்டுகின்றார். பழைய கட்டிடங்களை பார்த்தால் எத்தனையோ அடி பின்னுக்கு வைத்திருக்கின்றார்கள். படித்தவர்கள் இப்படி நடக்கின்ற போது நாங்கள் ஏதாவது ஒரு இடத்தில் மக்கள் பார்க்கக் கூடிய மாதிரி எங்களது அதிகாரத்தை சட்டவிரோத கட்டடங்களுக்கு நிலை நிறுத்தினால் அப் பயத்தில் எல்லோரும் சட்டப்படி கட்ட வேண்டும் என்று நினைப்பார்கள்.

எமது சபை மட்டும்தான் துரிதமாக அதாவது எங்களிடம் ஏதாவது வந்தால் தவிசாளர் என்ற முறையில் உங்களிடம் எல்லாவற்றையும் சொல்லாமல் நாங்களே நேரில் சென்று அதை அப் பிரதேசத்தில் ஏதாவது உறுப்பினர் இருந்தால் அவரிடமும் கலந்தாலோசித்து தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கி உங்களிடம் வராமல் இயன்றளவு தடுத்து செய்ய வேண்டும். எல்லா உறுப்பினர்களும் அதே எண்ணத்தில் தான் இருக்கின்றோம். அது எமது சபைக்கு கிடைத்த வரப்பிரசாதம் என்றுதான் சொல்ல வேண்டும். எவ்வளவுதான் கருத்து முறண்பாடுகள் நிர்வாகம் சம்மாந்துறை சபை என்ற ரீதியில் இருக்க வேண்டும். அடுத்ததாக நாம் சட்ட ரீதியாக செய்த வேலை இந்த Tower. முதல் இதற்கு சட்ட விரோதமான மின்சாரம், சட்டவிரோதமான நீர் இருந்ததை நாம் சட்டரீதியாக செய்ததை ஹிஜ்ரா சந்தியில் இருந்த குழியை காட்டி தவிசாளர் மரணித்துவிட்டாரா என்று FaceBook இல் போடுகின்ற அளவுக்கு இருக்கின்றார்கள் என்றால் RDA இடம் சபையால் இதை சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயம். அது நாம் செய்ய இயலாது. மாநகர சபை என்றாலும் பரவாயில்லை அவர்களுக்கு அந்த அதிகாரம் இருக்கின்றது. கட்டாயம் நாம் தவறு எங்கு நடக்கின்றது என்பதை சுட்டிக்காட்ட வேண்டிய சூழ்நிலையில் தள்ளப்பட்டு இருக்கின்றோம்.

தற்போது கொவிட் - 19 காலத்தில் எமது ஊழியர்களும் நாமும், நமது சபையும் செய்கின்ற எவ்வளவோ முயற்சிகள் மக்களுக்கு சென்றடைகின்றதா என்று இருக்கின்றது. எத்தனையோ படித்தவர்கள் கழிவு மடுகளை வீதியில் தோன்டி இருக்கின்றார்கள். மாரி காலத்தில் அது வெடித்து துர்நாற்றம் வீசுகின்றது. எனவே நாங்கள் இச் சட்டத்தை ஏதாவது ஒரு இடத்தில் இனிமேல் இதை பிரயோகிக்க வேண்டும். தற்போது மீன் விற்கும் இடத்திற்கு பின்னால் கட்டப்பட்ட கட்டடத்தை நான் எனது தற்துணிவால் தடுத்து வைத்தேன். இல்லாவிட்டால் அவ் இடத்திலும் ஒரு சட்டவிரோதமான கட்டடம் கட்டப்பட்டு இருக்கும். இவ்வாறு முடிந்தளவு கௌரவ உறுப்பினர்களும் ஈடுபடுகின்றார்கள். ஒரே ஒரு பிரச்சினை நாங்களும் மக்களும் என்ற படியால் நேரடியாக மோதியவுடன் ஏதாவது பிரச்சினைகள் வரலாம். அது உங்களுக்கும் தெரியும். நீங்களும் எத்தனையோ விடயத்தில் சட்ட ரீதியாக பார்க்கின்ற போது இப் பிரச்சினைகளினால்தான். இல்லாவிட்டால் உடனடி தீர்வு ஒரே

வார்த்தையில் சொல்லலாம். நெகிழ்ச்சித் தன்மையுடன் எங்கையாவது ஒரு இடத்தில் சட்டத்தை நிலைநிறுத்தி அதை இல்லாமல் செய்தால் நிச்சயமாக மற்றவர்கள் அதற்கு பயப்படுவார்கள். பௌசி மாவத்தையிலே அதிகமான கட்டடங்கள் விதிமுறைகளுக்கு அப்பால் கட்டப்படுகின்றது. அப்ரார் பள்ளிவாசல் பிரதேசத்திலும் ஒரு கட்டடம் கட்டப்படுகின்றது. இவ்வாறு எல்லா இடங்களிலும் நடக்கின்றது. எனவே எங்கையாவது ஒரு இடத்தில் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்தால் மற்றவர்களும் பயப்படுவார்கள். நமது காலத்துக்குள்ளாவது இதை செய்ய வேண்டும். எந்த அரசியல் காற்புணர்ட்சிகளும் இல்லாமல் சட்டத்தை நிலைநிறுத்துவதில் நமக்கு நல்ல செயலாளர் இருக்கின்றார். அவரையும் வைத்து நாம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சபைக்கு மாத்திரமல்ல இந்த ஊரின் பிதாவாக இருக்கின்ற தங்கள் மூலம் முன் வைத்திருக்கின்ற நில அளவை சம்மந்தமான ஏற்பாட்டின் பிரகாரம் எமது பிரதேசத்திலே இருக்கின்ற அனைத்து பாதைகளும் கட்டிடங்களும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நீங்கள் வைத்திருக்கின்ற கருத்தை முழுமையாக ஆதரித்தவனாக, அதை முன்னெடுத்து செல்வதற்காக உங்களால் முடிந்த ஏற்பாடுகளை நீங்கள் செய்வதற்கு இந்த சபை சார்பாகவும், என் சார்பாகவும் நான் ஒத்துழைப்பினை தருவோம் என்று கூறிக்கொள்வதோடு, சம்மாந்துறை புளக் ஜே கிழக்கு 1ம் பிரிவு இதுவரை நில அளவை செய்யப்படாமல் இருப்பதன் காரணத்தால் நில அளவைத் திணைக்களத்தினால் கால தாமதங்கள் இப்படியான பிரச்சினைகள் வருவதற்கு வழிவகுக்கின்றன. ஆகவே பெரும்பாலான பிரதேசங்கள் அளக்கப்பட்டிருந்தாலும் புளக் ஜே - 01 இதுவரை அளக்கப்படவில்லை. அதனை இந்த சபையிலே ஏற்கனவே கூறியிருந்தேன். தற்போது நடைபெறும் என எதிர்பார்க்கின்றேன்.

அளக்கப்பட்ட பிரதேசங்களில் எமது மக்கள் தான் நினைத்த பிரகாரம் மேற்சொல்லப்பட்ட தவறுகள் அனைத்தையும் உள்ளடக்கி செயற்படுவது எதிர்காலத்தில் இவ் ஊருக்கும் பல சட்டசிக்கல்களையும், பிரச்சினைகளையும் கொண்டுவரும். ஒரு குடியிருப்பு நிலத்தினை பெறுபவர் அதனை நொத்தாரிசு மூலம் பெற்றுக்கொண்டு உரியவரிடம் இருந்து பெற்றுக் கொண்டு இதை பலபேருக்கு விற்கின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலை ஒன்று நடைபெறுகின்றது. பிரதேச செயலாளரை சந்தித்த போது இவ்வாறான பிரச்சினை ஒன்றை எதிர்கொண்ட படியினால் பிரதேச செயலாளர் கூறியிருக்கின்றார் இங்கு ஒரு நிலத்தை விற்றால் அதனை நாங்கள் பேமிட் வழங்குவதற்கு முதல் அது பலருக்கு விற்கப்பட்டுவருகின்றது. அதனால் இவ்வாறான பிரச்சினைகள் இருப்பதனால்தான் நாங்கள் உடனடியாக எங்களிடம் வருகின்ற முறைப்பாடுகளுக்கு உடனடியாக தீர்வினை எடுத்து பேமிட்களை வழங்க முடியாமல் இருக்கின்றது.

இதே போன்று பலதரப்பட்ட பொதுவான விடயத்தை ஊர் மக்கள் மத்தியில் கொண்டு சென்று நடைமுறைப்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் சம்மாந்துறையில் இருக்கின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம் என நான் கூறுவதோடு, எனது ஹிஜ்ரா முதலாம் வீதியில் மாரி காலமாக இருக்கின்ற படியினால் அதில் இருக்கின்ற மரக்கிளைகளினால் இருள் சூழ்ந்து மின் விளக்கின் ஒளி பாதைகளுக்கு விழாத படி தொடர்ந்து இருந்து வருகின்றது. அதற்கு எமது செயலாளருடன் தொடர்பு கொண்ட போது அந்த Machine இன் Belt இல்லாத காரணத்தினால் அது செய்யப்படவில்லை என்ற உண்மையை கூறினார். அந்தளவு வாள் கொண்டு வெட்டும் பெரிய மரம் அல்ல. அரிவாள் கத்தி மட்டுமே போதுமானது. எனவே அதனை துப்பரவு செய்து ஒளி ஊட்டுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தற்போது இருக்கின்ற பிரச்சினை பக்கத்து வீட்டுக்காரரால் வீடு கட்டுவதற்கு அத்திவாரம் வெட்டும் போது பக்கத்து வீட்டுகாரர் இங்கு வந்து கடிதம் தருகின்றார் மதிலில் இருந்து 4 அடி கழித்துதான் கட்ட வேண்டும் என்று, ஆனால் அந்தளவுக்கு தற்போது ஊரில் இடம் இல்லை. அவரின் மதிலை கழித்து ஒரு அடியோ அல்லது மதில் பக்கத்தில் கட்டுவதற்கு நாம் கட்டாயம் அனுமதி கொடுக்க வேண்டும். 200 மீற்றர் நிலம் வீடு கட்டுவதற்கு

இடம் எடுக்கின்றோம் என்றால் அஸ்ரப் வட்டையை பார்த்தால் 2000 கிலோ மீற்றரிற்கு மேல் சென்றிருக்கின்றார்கள். இதை நாம் சுட்டிக்காட்டி அரசாங்கத்திற்கு அறிவித்தால் இதை காட்டிக் கொடுப்பது போல் இருக்கமாட்டாதா? அத்தோடு எல்லாவற்றுக்கும் இடாப்பு இருக்கின்றது. வீடு கட்டி இருக்கின்றார்கள். எல்லாவற்றிற்கும் உரமானியம் 2015 ஆம் ஆண்டு அந்தந்த வளவுக்காரர்கள் எடுக்காவிட்டாலும், அந்தந்த வட்டை விதானைகள் எடுத்திருக்கின்றார்கள். தற்போது வீடு கட்டுகின்ற இடமாக இருக்கின்றது. நாம் 200 மீற்றர்தான் போகவேண்டும் என்றால் தற்போது செட்டவட்டையை பார்த்தால் அதற்குரிய இடாப்பு இல்லாமலாக்கப்பட்டிருக்கும். வேளாண்மை செய்வதற்கு மாத்திரம்தான் இடாப்பு ஏற்றப்பட்டிருக்கும் இதை நீங்கள் மிகவும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நான் அதில் மிகவும் துக்கப்படுபவன். இவை எல்லாம் நிரந்தர சொத்துக்கள். 90 வீதமான வீடுகள் சட்டவிரோதமான வீடுகள் அதை காட்டி தருவதற்கு ஒருவரும் இல்லை. தற்போது எல்லோரும் மாடி வீடு கட்டி பீலியை வீதியின் நடுவில் வைத்திருக்கின்றார்கள். எந்தவொரு கட்டுப்பாடும் இல்லாமல் நடக்கின்றது. இதை பல தடவை செயலாளரிடம் கூறியிருக்கின்றேன். 03 பட்டதாரிப் பயிலுநர்களையும் வைத்து ஒவ்வொரு வீதி வீதியாக சென்று கடிதம் கொடுத்து 03 கிழமைக்குள் ஒழுங்குபடுத்தாவிட்டால் உங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்தல் செய்ய வேண்டும் என்று, இவ்வாறு செய்யாவிட்டால் கட்டுப்படுத்த இயலாது. இதற்கு உங்களது பங்களிப்பும் தேவை. சட்டம் சொல்வது என்னவென்றால் ஒரு வீடு கட்டுகின்ற போது பின்னுக்கு 07 அடி இடம் இருக்க வேண்டும், பக்கத்தில் இடம் இருக்க வேண்டும். ஆனால் விதிவிலக்கு என்னவென்றால் இரண்டுபேருக்குமிடையில் ஒரு உடன்பாடு வருகின்ற போது பொதுவில் கட்டலாம். மதில் ஓரமாக கட்டலாம் ஆனால் ஜன்னல் திறக்க இயலாது. கூரை மற்ற பக்கம் செல்ல இயலாது. ஆனால் எமது மக்கள் மதில் ஓரம் கட்டிவிட்டு தண்ணியை மற்றவரின் வளவுக்குள் விடுகின்றார்கள். அது கட்டிய பின்னர் வருகின்ற பிரச்சினை சபை என்ற ரீதியில் UDA சட்டத்தின் கீழ் 2005 ஆம் ஆண்டு சம்மாந்துறை பிரதேச சபை எல்லை UDA சட்டத்தின் கீழ் வருகின்றது. அதில் எல்லாம் தெளிவாக இருக்கின்றது. சிலரின் அபிப்பிராயம் என்னவென்றால் 06 பேர்ச் இல்லாவிட்டால் அனுமதி தரமாட்டார்கள் என்று, இல்லை. நாம் வழங்கலாம்.

நான் தவிசாளர் என்ற ரீதியில் உங்களின் அனுமதியோடு உங்களது அதிகாரத்தில் செய்யலாம். ஆனால் கட்டடம் ஒழுங்காக இருக்க வேண்டும். கட்டடம் பரப்பு 10 என்றால் 20 அடிதான் உயரம் போகலாம். ஆனால் 10 அடியை வைத்து 30 அடி உயரம் போகின்றார்கள். ஆனால் அது ஆபத்து. இவ் ஊரில் அதிகமான கட்டடங்கள் அவ்வாறுதான் இருக்கின்றது. இதை கட்டுப்படுத்த வேண்டும் என்று எனக்கு பெரிய அவா. ஆனால் ஒத்துழைப்பு இல்லாமல் செய்ய இயலாது. நான் DS இடம் கூறியிருக்கின்றேன். கிராம சேவகர்களை அறிவிக்க சொல்லுங்கள் என்று, அவர்களது குறிச்சியில் சட்டவிரோதமான கட்டடம் ஒன்று கட்டப்படுமானால் எம்மிடம் அறிவித்தால் அதை நாம் தடை செய்யலாம். சட்டவிரோதமான கட்டடங்களை ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக ஜனவரி மாதம் இறுதிக் கட்டத்தில் ஒவ்வொரு பாதையாக சென்று மக்களுக்கு அறிவித்தல் கொடுத்து மார்ச் மாதம் 31ம் திகதிக்கு முதல் இவைகளை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**தீர்மானம் - 04/35/15**

சட்ட விரோதமான கட்டடங்கள் தொடர்பாக மக்களுக்கு அறிவித்தல் கொடுத்து மார்ச் மாதம் 31 ஆந் திகதிக்கு முதல் இவைகளை ஒழுங்குபடுத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம்.ஜிப்ரி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பொதுச் சொத்துக்கள் என்று வருகின்ற போது கௌரவ உறுப்பினர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஏனென்றால் சபையின் சொத்துக்கள் நமது பொறுப்பு. ஒவ்வொரு அங்கத்தவரினதும் பொறுப்பு. சபையின் சொத்துக்களை தனி நபர்களால் அதை எடுக்கும் முயற்சிகள் ஏதாவது நடக்குமானால் அவைகளை தடுப்பது இந்த சபையின் கடமை. நான் நேற்று அம்பாரையில் இருந்து வரும் போது பார்த்தேன். மல்வத்தை 1, 2 கடையோடு சபைக்குரிய நிலத்தில் ஒரு தகரக் கொட்டில் உடைந்த நிலையில் இருந்தது. தற்போது அது திருத்தப்பட்டுள்ளது. என்னைப் பொருத்தவரை அது சட்ட விரோதமான செயல் உடனடியாக செயலாளர் அது சபையின் சொத்தானால் அந்த இடத்தை பாரம் எடுப்பதற்கும் அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறிக்கொள்கின்றேன்.

கட்டட விடயங்களில் நீங்கள் யோசிக்க வேண்டும். நீங்கள் என்னோடு ஒத்துழைக்க வேண்டும். அவர்களுக்கு விளங்கப்படுத்த வேண்டும். 2 பேச் இலும் வீடுகட்டுவதற்கு அனுமதி கொடுக்கலாம். ஆனால் அக்கட்டடம் ஒழுங்காக இருக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ.பௌசுள்ளாஹ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வீதியில் கேட் திறப்பது, தண்ணியை வீதியில் விடுவது அதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, Partition Plan இல்லாமல் எதிர்வரும் காலங்களில் நீர் இணைப்பிற்குரிய அனுமதியும் கொடுக்க கூடாது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதுதான் ஒரு சிக்கல். Water Board வீதியில் அகழி வெட்டுவதற்கு மாத்திரம்தான் நம்மிடம் அனுமதிக்காக வருகின்றது. நீங்கள் சொல்வது போல் தடுக்கலாம். Electricity Board GS ஒப்பமிட்டால் இணைப்பினை கொடுக்கின்றது. அது சட்டவிரோதமான கட்டடமா என்ன என்று இல்லை. இதை Cabinet Level இல் கூட எடுத்தவுடன் அவர்கள் சொல்கின்றார்கள் அதில் நடைமுறை சிக்கல்கள் இருக்கின்றது என்று, நான் சொன்னேன் இல்லை ஒரு சட்டவிரோதமான கட்டடங்களுக்கு அரசாங்கம் எப்படி அனுமதி கொடுப்பது.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அதை தீர்மானமாக எடுத்து செய்ய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதை தீர்மானமாக எடுப்போம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் குடிநீர் இணைப்பு வழங்கப்படுகின்ற போது சில ஆவணங்கள் திரட்டப்படுகின்றன. வளவுக்குரிய பேமிட் அல்லது உறுதி, அவருடைய வதிவிடக் கடிதம், தேசிய அடையாள அட்டை இவ்வாறு இருக்கின்ற படியினால் வீதியில் அகழி வெட்டுவதற்காக மாத்திரம்தான் எம்மிடம் அனுமதி கோரப்படுகின்றது. அதற்காக அவர்களால் வழங்கப்படுகின்ற வரைபடம் மாத்திரம்தான் எம்மிடம் வருகின்றது. அனால் சபையினுடைய தீர்மானமாக சம்மாந்துறை பிரதேச எல்லைக்குள் குடிநீர் இணைப்பு வழங்குவதாக இருந்தால் குறித்த இடத்தினுடைய Partition Plan அந்த ஆவணத்துடன் சேர்க்கப்பட வேண்டும் என்பதை எழுத்து மூலம் அறிவித்தால் இப் பிரச்சினைக்கு மிக இலகுவாக தீர்மானத்திற்கு வரலாம்.

**தீர்மானம் - 04/35/16**

சம்மாந்துறை பிரதேச எல்லைக்குள் நீர் இணைப்பு பெறுவதாயின் குறித்த இடத்தின் சட்டரீதியான ஆவணங்கள் (Deed/Partition Plan) சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/35/17**

2021 ஆம் ஆண்டுக்கான பெறுகைச் சபை, மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு என்பவற்றினை தாபிப்பதற்கான பிரேரணை.

**பெறுகைச் சபை:**

| | | |
|---|---|---|
| I. | ஜனாப்: ஏ.எம்.முஹம்மட் நௌசாட் | - கௌரவ தவிசாளர் (தலைவர்) |
| II. | ஜனாப்: எம்.ஏ.கே.முஹம்மட் | - செயலாளர் (உறுப்பினர்) |
| III. | திரு: எஸ்.திருபிரகாசம் | - கணக்காளர், வலயக்கல்வி அலுவலகம் சம்மாந்துறை (உறுப்பினர்) |

**தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு:**

| | | |
|---|---|---|
| I. | ஜனாப்: எம்.எல்.அமீர் அலி | - பொறியியலாளர், இலங்கை போக்குவரத்து சபை சம்மாந்துறை (தலைவர்) |
| II. | திரு: ஏ.யோகானந் | - தொழில்நுட்ப உத்தியோகத்தர், சம்மாந்துறை பிரதேச சபை (உறுப்பினர்) |
| III. | திரு. என்.சிவராமன் | - தொழில்நுட்ப உத்தியோகத்தர், பிரதேச செயலகம் சம்மாந்துறை (உறுப்பினர்) |

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/35/18**

CBG நிதி ஒதுக்கீட்டின் மூலம் பின்வரும் வேலையினை செய்வதற்கான பிரேரணை.

1. Provide funds for furniture to Sennalkiramam Reading Room Sammanthurai. – RS.300,000.00

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்.நிலுஃப்பா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் என்.கோவிந்தசாமி அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, Sub Division Plan சம்மந்தமான விடயங்களை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். Sub Division Plan கொடுக்கின்ற பொறுப்பு எமது பிரதேச சபைக்குரியது. ஒரு 03 ஏக்கர் காணி ஒரு காலத்தில் விவசாய காணியாக இருந்திருக்கலாம். அது Sub Division செய்து 25 பேருக்கு கொடுத்திருப்பார்கள். அதன் Plan எமது பிரதேச

சபைக்குள்தான் இருக்கும். ஒருவர் வீடுகட்டுவதற்கு விண்ணப்பிக்க வந்தால் அவருக்கு நாங்கள் Sub Division Plan கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்காவிட்டால் நாம் தான் பொறுப்பு.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அவரிடம் Sub Division Plan கேட்க வேண்டும். Sub Division Plan அனுமதி கொடுப்பது சபை.

**கௌரவ உறுப்பினர் என்.கோவிந்தசாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, காணிக்குரிய Sub Division Plan பிரதேச சபைக்குள் இருக்க வேண்டும். அதன் பிரதியை அவரிடம் கொடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் ரூபா 500.00 செலுத்தி பிரதேச சபையில் அல்லது நகர சபையில் விண்ணப்பப் படிவத்தை எடுத்து நாங்கள் பூரணப்படுத்தி கொடுக்க வேண்டும். கொடுத்தால் ஒரு விண்ணப்பம் தருவார். நாங்கள் Sub Division Plan இருக்கின்றதா என்று தேடிப் பார்த்து இருந்தால் Sub Division இனை கொடுக்க வேண்டும். தராவிட்டால் வீடு கட்டுவதற்கு அனுமதி கொடுக்க வேண்டும். இதில் அவர் அவ்வாறு செய்யாமல் அவரது விருப்பத்திற்கு Sub Division Plan உரிய காணியில் வீடு கட்டுவதாக இருந்தால் அவருக்கு எதிராக ஒரு சதுர அடிக்கு ரூபா 500.00 அபராதம் விதித்து அவருக்கு வீடு கட்டுவதற்கு அனுமதி கொடுக்க வேண்டும்.

Sub Division Plan எல்லா காணிகளுக்கும் இல்லை என்பதை நாம் தெளிவாக தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு காணி ஒருவருக்கு சொந்தமான காணியாக இருந்தால் அதற்கு Sub Division Plan வராது. 2 அல்லது 3 ஏக்கர் காணியை பிரித்து துண்டாடி இருந்தால் மட்டும்தான் அதற்கு Sub Division Plan வரும். Sub Division Plan என்றால் என்ன என்பதை முதல் தெளிவாக விளங்க வேண்டும். நாங்கள் பிழையை செய்துவிட்டு மக்களின் மீது திணிக்கக் கூடாது. வீடு கட்டுவதாக வந்தால் புத்திமதி சொல்ல வேண்டும். நீங்கள் 500.00 கொடுத்து ஒரு விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தி போட்டுவிட்டு கட்டுங்கள். அதற்கு பின்னர் வருகின்ற பிரச்சினையை பார்ப்போம் என்று தெளிவூட்ட வேண்டும். நாங்கள் பிழை செய்வதால் அவர்கள் இதற்கு பின்னால் செல்வதை விட வீட்டை கட்டி முடித்து விடலாம் என்று கட்ட தொடங்குகின்றார்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால் இவர்களுக்கு படம் வரைந்து கொடுக்கின்ற பட வரைஞர்கள். அவர்கள் பிரதேச சபைக்குள்ளால் சென்றால் சிக்கல் நீங்கள் கட்டுங்கள் என்று கூறுகின்றார்கள். கௌரவ உறுப்பினர் அவர்கள் கூறியது போல் Sub Division என்பது இந்த நாட்டின் சட்டப்படி 06 பேர்ச் இற்கு குறைந்த காணியை பிரிக்க இயலாது. ஆனால் நாம் 04 பேர்ச் என்று பரிந்துரை செய்திருக்கின்றோம். 06 பேர்ச் தான் இருக்க வேண்டும். 12 பேர்ச் இருக்கின்ற ஒருவர் Sub Divide செய்து Sub Division Plan கொண்டு வந்தால் Sub Division Plan இனை அனுமதிப்பது சபை. அந்த Plan இனை வைத்துதான் அந்த உறுதியை எழுதி 12 பேர்ச் இல் 06 பேர்ச் இற்கு சொந்தம் கொண்டாடி வீடு Application வந்தால் இப் Plan இனை பார்த்து செய்ய வேண்டும். அவர் சொல்வது நூற்றுக்கு நூறு வீதம் சரி. ஆனால் எங்களுக்கு சொந்தமான 72 பேர்ச் வளவில் வீடு கட்ட வேண்டும் என்றால் Sub Division Plan எடுக்க தேவையில்லை. ஆனால் அதை பிரித்து செய்வது என்றால் Sub Division Plan கட்டாயம் தேவை.

**கௌரவ உறுப்பினர் என்.கோவிந்தசாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, Plan எடுத்து எல்லாம் செய்து வீரமுனையில் ஒரு வீடு கட்டப்பட்டது. ஆனால் அவர்களின் Plan இல் எல்லை மதிலில் இருந்து 7 அடி கட்டப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. கட்டுவதற்கு இடம் போதாது. தற்போது கட்டடம் கட்டப்பட்டுவிட்டது. இங்கு approval மறுக்கப்பட்டது. அவர் நாங்கள் பிழை செய்கின்றோம் என்று நினைக்கின்றார். பிரதேச சபையில் சொல்லி அதை தீர்த்து தாருங்கள் என்று, நான் இறுதியாக சொன்னேன் ஒரு சதுர அடிக்கு 500.00 தண்டம் அறவிடுவார்கள். நீங்கள் அனுமதி எடுத்துதான் இருக்கின்றீர்கள் நீங்கள்

கட்டுங்கள் என்று, இதுவரை கட்டி அதில் குடியிருக்கின்றார்கள். கேட்காமல் கட்டுவதுதான் தவறு கேட்டு கட்டும் போது ஒரு நாளும் தவறு வராது. ஆனால் பிரச்சினை வருகின்ற போது 500.00 சதுர அடிக்கு தண்டம் அறவிட்டால் சரியாகும்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வீடு கட்டும் போது அனுமதி எடுக்காமல் கட்டிய பின்னர் பக்கத்து வீட்டோடு பிரச்சினை வந்த பின்னர் அனுமதி எடுக்கின்றார்கள். அவ்வாறு அனுமதி எடுத்தால் அனுமதி கொடுக்கின்ற TO முன்னர் என்ன பிரச்சினை ஏற்பட்டது என்று அதை அக்கடிதத்தில் சுட்டிக்காட்ட வேண்டும். சுட்டிக் காட்டி கொடுக்கும் போது அந்த TO அல்லது அரச உத்தியோகத்தர் சென்று பார்க்கும் போது இந்தப் பிரச்சினை இருக்கின்றது இதை விட்டுவிட்டு அந்த வீட்டை கட்டுகின்றார்களா? என்று பார்க்க முடியும். அதை நாம் கட்டாயமாக சுட்டிக்காட்டி கொடுக்க வேண்டும்.

அடுத்ததாக எங்களுக்கு பொதுமக்கள் ஏதாவது ஒரு கடிதத்தில் இந்த தகவலை தாங்கள் என்று கடிதம் அனுப்பப்பட்டால் தகவல் கொடுக்கமுடியுமானால் தகவலை கொடுக்க வேண்டும். கொடுக்க முடியாவிட்டால் என்ன காரணம் என்று கட்டாயம் அனுப்ப வேண்டும். நமது பிரதேச சபையில் யாரையும் பிழையாக சுட்டிக்காட்ட நினைக்கவில்லை. பிரதேச சபைக்கு பல கடிதங்கள் பொதுமக்களிடம் இருந்து வருகின்றது. ஆனால் அக் கடிதத்திற்கு கொடுக்க முடியாது என்றால் என்ன காரணம் என்று அனுப்பப்படுவதில்லை. கட்டாயமாக இதை செய்ய வேண்டும். ஏனென்றால் நாம் பிரதேச சபை உறுப்பினராக இருக்கின்றோம், தவிசாளராக இருக்கின்றோம் நமக்கும் அப் பிரச்சினை சாரும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கேட்கப்படுகின்ற ஒவ்வொரு கேள்விகளுக்கும் கட்டாயமாக கொடுக்க வேண்டும். அதில் தாமதங்கள் இருக்குமானால் அதை கொடுக்கின்ற பொறுப்பு செயலாளரினுடையது. தாமதம் இருக்குமானால் தவிசாளருக்கு முரண்பாடாக வந்து அதன் பின் தவிசாளரின் பொறுப்பாக மாறுகின்றது. அதை சரியாக நடத்தாவிட்டால் அவர்கள் மீண்டும் தவிசாளருக்கு Appeal செய்ய வேண்டும். நாங்கள் இத்தனையாம் திகதி கேட்டதற்கு வரவில்லை என்றால் இதை கொடுக்க வேண்டிய பொறுப்பு என்னுடைய பொறுப்பாக மாறுகின்றது. கட்டாயம் செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று நான் ஒன்றை நினைவு கூர்ந்தவளாக, அதாவது எமது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் சேர் அவர்கள் தற்போது கொவிட் - 19 காரணமாக தொற்றுக்குள்ளாக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். அவர் சுகம் பெற வேண்டும் என்று துஆ கேட்டவளாக, இந்த சபையில் ஆரம்பிக்கின்றேன். எல்லோரும் கட்டடத்தை பற்றியும், அனுமதி எடுப்பது பற்றியும் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த சபைக்கு வந்து 02 மாதங்களின் பின் இருந்து நான் இதைத்தான் கூறிவந்தேன். இதுவரை காலமும் இதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனது வட்டாரமான மலையடிக்கிராமம் - 03, மலையடி – 04 இரண்டிற்குமிடைப்பட்ட இடத்தில் ஒரு பக்கம் S – 24ம் பாய்ச்சல் வாய்க்காலும் மறுபக்கம் பிரதான பாதையும் அமைந்திருக்கின்றது.

இப் பாதை மக்கள் செறிந்து வாழும் இடமாக இருப்பதாலும் அப் பாதையில் அதிகமான பிரயாணிகள் செல்வதாலும் அது ஒரு பாரிய பிரதான பாதையாக அமைந்து எனது இளம் வயது காலம் தொட்டு இருந்தது. இந்த காலகட்டத்திலே தற்போது இப் பாதையை மக்கள் குடியிருக்கப்பட்ட நிலம், குடியிருப்பதற்கு முதல் சிலர் நெற்செய்கை செய்யக்கூடிய காணியாக இருந்தது. எமது கௌரவ உறுப்பினர்கள் கூறியது போன்று அனுமதி இன்றிதான் மூடப்பட்டு வந்தது. வடிகான்களும் அமைக்கப்பட்டிருந்தன. தற்போதய கால கட்டத்திலே அந்த வடிகான்களும் மூடப்பட்டு வாய்க்காலும் மக்களால் நெருக்கப்பட்டு, பாதைகளும் நெருக்கப்பட்டு கட்டடங்கள்

கட்டப்பட்டு வருகின்றது. இதைப்பற்றி நான் கௌரவ உறுப்பினர் என்ற ரீதியில் இந்த சபைக்கு அறிவித்தால் என்னை ஒரு தவறான முறையில் இங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சிலர் என்னை தவறான முறையில் அந்த இடத்தில் சென்று இவர் மட்டும்தான் இதற்காக உந்துதலாக இருக்கின்றார் என்று கூறி மக்களிடம் ஒரு கசப்பு உணர்வினை ஏற்படுத்துகின்றார்கள்.

கௌரவ தவிசாளர் அவர்களே, பின்னுக்கு வரும் பிரச்சினையைத்தான் முன்கூட்டி சொன்னேனே தவிர எனக்கு எந்தவிதமான தனிப்பட்ட பிரச்சினை எவருடனும் இல்லை. உண்மையாக சொல்லப்போனால் நபி (ஸல்) அவர்கள் கூட பாதையை சீர்திருத்த வேண்டும் என்று கூறி இருக்கின்றார்கள். பாதை விசாலமாக இருந்தால்தான் நீங்களோ, நானோ, யாரோ கூட ஒரு வாகனத்தை எடுத்து செல்லும் போது இன்னுமொரு வாகனத்திற்கு இடம் விடுவதற்கு இடமளிக்கும். ஒரு பக்கம் வாய்க்கால் மறுபக்கம் நெருக்கம் என்றால் அவ் வாகனம் எந்தப்பக்கம் இடம் கொடுத்து செல்வது. நீங்கள் அனைவரும் அந்த பாதையை வந்து பார்க்க வேண்டும். கொச்சிக்காய் தூளர் சந்தியில் இருந்து S – 24 வாய்க்கால் முடிவடையும் இடம் வரை இவ்வாறுதான் நடந்து கொண்டிருக்கின்றது. இது எனது பிழையா? கட்டடங்கள் கட்டுவதற்கு இந்த சபை ஊடாக அனுமதி வழங்கப்படுகின்றது. ஆனால் உண்மையாக அந்த அனுமதி உரிய முறைப்படி வழங்கப்படவில்லை என்பதையும் நான் இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அண்மையில் நீர்பாசன பொறியியலாளருடன் பாதைகள் வடிகான்கள் பார்ப்பதற்காக சென்றிருந்தோம். அவர் காலால் அளந்து விட்டே சொன்னார் யார் இந்த இடத்திற்கு அனுமதி வழங்கியது என்று, இவ்வாறான சில பிரச்சினைகள் தவிர்த்துக் கொள்ளப்பட வேண்டும் எங்களது காலகட்டத்திற்குள். நாங்கள் உறுப்பினராக வந்து வெறுமனே இருந்துவிட்டு யாருக்கும் சாக்குப்போக்கு சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து தீர்மானம் எடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அனுமதி கொடுத்திருந்தால் அதை சில நிபந்தனைகளுடன் செய்திருப்போம்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் ஜிப்ரி அவர்கள் கூறினார்கள் ஒரு பக்கத்து வீட்டு கட்டடத்திற்கு அடி தள்ளி போடத்தேவையில்லை அனுமதி கொடுக்கலாம் என்று, மிகவும் தவறான விடயம். நீங்கள் சொல்வது போல் அக் கட்டடத்திற்கு சம்மந்தப்படாதவர்கள் இல்லாமல் இவர்கள் வந்து நிலத்தை முதல் வாங்கும் போது அவர்கள் கட்டமுடியுமா, இடம் போதுமா என்று கவனம் எடுக்க வேண்டும். தவறை மனிதர்கள் வைத்துவிட்டு மற்றவர்களை குற்றஞ்சாட்டக்கூடாது என்பதையும் நான் இந்த இடத்தில் கூற விரும்புகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் கட்டாயப்படுத்தி சொல்லவில்லை. ஊரின் நலனுக்காக சொன்னேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உங்களது கருத்தில் எந்தப்பிழையும் இல்லை.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை வீதியில் வசிக்கின்ற சம்மாந்துறையில் பெரும்பான்மையான மக்கள் பாவிக்கின்ற Network Dialog ஆகும். Dialog தொலைத்தொடர்பு அப் பிரதேசத்தில் Coverage இல்லாமல் இருக்கின்றது. அப் பிரதேசத்தில் Dialog நிறுவனத்தின் Tower ஒன்று வருவது மிகவும் சிறப்பாக இருக்கும் என்பது எனது கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
Tower இல் பெரிய சர்ச்சை இருக்கின்றது. அதாவது அதனை சுற்றி இருப்பவர்கள் மறுப்பு தெரிவிக்கின்ற போது அதை செயற்படுத்த இயலாது. அதே பிரச்சினைதான் நமக்கு அம்பாரை – 09 இலும் வருகின்றது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அப் பிரதேசத்தில் இருக்கின்றவர்களின் முறைப்பாட்டை வைத்துதான் நான் இந்த சபையில் பேசுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதை நிறுவுவதற்கு கொடுப்பது என்றால் சுற்றி இருப்பவர்கள் சம்மதம் வழங்க வேண்டும். அவர்கள் விண்ணப்பம் செய்கின்ற போது சுற்றி இருப்பவர்கள் அனுமதி தருவார்களானால் நாம் அதற்கு கொடுக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அதே பிரச்சினை சென்னல் கிராமத்திலும் இருக்கின்றது. அடுத்தது எமது சபையின் பராமரிப்பில் உள்ள பிஸ்மில்லா பாலர் பாடசாலை அதற்கு அருகில் உள்ள SP 19 கிளை கட்டடம் இத்தனை காலமும் பாழடைந்த நிலையில் இருந்ததால் தற்போது அக் கட்டடத்தை புணர் நிர்மானம் செய்து கொண்டிருக்கின்றார்கள். அதனால் எமது பாலர் பாடசாலைக்கு பாரிய பிரச்சினை என்னவென்றால் அக் கட்டடத்தில் அடைந்திருந்த வௌவால்கள் அத்தனையும் எமது பாடசாலையின் கட்டடத்திற்குள் அடைந்து இருக்கின்றது. அதனால் அப் பாடசாலை மிகவும் சிரமத்தை எதிர்நோக்குகின்றது. எந்த நேரமும் வௌவால்கள் இருப்பதனால் சில நேரம் ஜனவரி 25ஆந் திகதி ஆரம்பகட்ட பாடசாலைகள் ஆரம்பிப்பதாக இருக்கின்ற கருத்தின் படி ஆரம்பிக்கப்படுமாக இருந்தால் நாம் பாரிய சிரமம் ஒன்றை எதிர்நோக்குவோம். எனவே வௌவால்கள் செல்லாதவாறு வலை அமைத்தால் சிறப்பாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதை அடைக்க வேண்டும். அக் கட்டடம் உஸ்வா மௌலவிக்கு பாவனைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. நாம் கேட்ட போது தரவில்லை.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, உண்மையிலே அப்பாடசாலையினுடைய ஆசிரியை மிகவும் அர்ப்பணிப்போடு இரவு 11 மணிவரைக்கும் அவர்கள் நின்று வௌவால்களை விரட்டுகின்ற ஒரு சந்தர்ப்பம் இருக்கின்றது. இவைகளை கருத்திற் கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, உடங்கா – 02 University இற்கு பின்னால் இருக்கின்ற நீர்ப்பாசன திணைக்களத்திற்குரிய குளம் அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அந்த முறைப்பாடு வந்தது. உடனடியாக சபைக்கூட்டத்திற்கு வருகின்ற போது தொழில்நுட்ப உத்தியோகத்தரிடம் கூறினேன். அதில் ஒரு பிரச்சினை அது நீர்ப்பாசன திணைக்களத்திற்குரியது. அது ஒரு குளமாக இருந்தது. தண்ணீர் ஒன்று வாய்க்காலுக்குள் செல்ல வேண்டும் அல்லது வடிகான் அமைக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம்.சஹீல் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அதே போல் ஆண்டியர் சந்தியை ஊடறுத்து தொப்பியர் வீதியில் புதிதாக பாதை ஒன்று திறக்கப்பட்டுள்ளது. அப் பாதைக்கு மின்சார ஏற்பாடுகளை செய்ய வேண்டும். அத்துடன் ஆண்டியர் சந்தியில் இருந்து ஹனீபா சேவிஸ் நிலையம் வரைக்கும் தெரு விளக்கு போட வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அப்பாதையை தற்போது RDA இற்கு முன்மொழிந்திருக்கின்றோம். சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

A.M.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை